செ.வெ.எண். 05/ஆகஸ்ட் தேதி : 05.08.2016

**தருமபுரி வட்டம், பாப்பிநாயக்கனஅள்ளி, நல்லம்பள்ளி வட்டம், ஏ. ஜெட்டிஅள்ளி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற அம்மா திட்ட முகாம்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**





தருமபுரி வட்டம், பாப்பிநாயக்கனஅள்ளி, நல்லம்பள்ளி வட்டம், ஏ.ஜெட்டிஅள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்ற அம்மா திட்ட முகாம்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.08.2016) பொதுமக்களிடத்தில் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களைப் பெற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாம்களில் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இயற்கை மரண உதவித்தொகை 4 பயனாளிக்கும், குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம் செய்து 115 நபர்களுக்கும், வருமான சான்றிதழ் 3 நபருக்கும், சாதி சான்றிதழ் 4 நபருக்கும், இணையதள பட்டா மாறுதல் 12 பயனாளிகளுக்கும், முதியோர் உதவித் தொகை 3 பயனாளிகளுக்கும் வழங்கி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

வாரந்தோறும் வெள்ளிக்கிழமையன்று அம்மா திட்ட முகாம்களில் பொதுமக்கள் தங்களது கோரிக்கைகள் குறித்து மனுக்களை வழங்கலாம். அம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்கள் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உறுப்பினராக சேர்ந்து உழவர் பாதுகாப்பு அட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். இதன் மூலம் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித் தொகை, இயற்கை மரணம், விபத்து மரணம் உதவித் தொகைகள் பெற விண்ணப்பிக்கலாம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் ஏழை குடும்பங்களின் மருத்துவ பாதுகாப்பை நோக்கமாக கொண்டு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தை வழங்கியுள்ளார்கள். இதன் மூலம் உழவர் பாதுகாப்பு திட்ட உறுப்பினர்கள் ஆதரவற்ற முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் பயன்பெறலாம். எனவே அனைவரும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் பயன்கள் குறித்த துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.

இம்முகாம்களில் மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு. தொ.மு. நாகராஜன், சோகத்தூர் ஊராட்சிமன்ற தலைவர் திரு. வேடியப்பன், ஏ. ஜெட்டிஅள்ளி ஊராட்சிமன்ற தலைவர் திரு. சரவணன், தருமபுரி கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, வட்டாட்சியர்கள் திருமதி. பாரதி, வட்டாட்சியர் திரு. கருப்பசாமி, துணை வட்டாட்சியர் திரு. ராஜராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி